STC.No. 112/2024 PW2.திரு.தங்கவேல்

தேதி– 23.03.2026

எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் எம்.காம். படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரர் சுப்புராஜ் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்த காசோலைகளின் எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. காசோலைகளின் தேதி என்ன என்றால் 25.07.2024, 01.08.2024 ஆகும். மேற்படி காசோலைகளானது சிட்டியூனியன் வங்கியின் காசோலைகள் ஆகும். எனக்கு வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி காசோலைகளின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

2) 25.07.2024, 01.08.2024ம் ஆகிய காசோலைகளானது காலாவதியான காசோலைகள் என்றால் சரிதான். இவ்வழக்கின் முழு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், அருண்குமார் கூறியதன் பேரில் தெரியும். நான் தாக்கல் செய்த காசோலைகளின் தொகைகள் என்ன என்றால் 25.07.2024ம் தேதியில் ரூ.1லட்சமும், 01.08.2024 தேதிக்கு ரூ.50ஆயிரம் ஆகும். சுப்புராஜ் தாக்கல் செய்த காசோலையின் தொகை எவ்வளவு என்றால் ரூ.1,50,000/– என்று அருண்குமார் கூறினார். இவ்வழக்கில் தாக்கல் செய்த விபரத்தை சுப்புராஜ் என்னிடம் கூறினாரா என்றால் சுப்புராஜ் மற்றும் அருண்குமார் ஆகிய இருவருமே கூறினார்கள்.

3) நான் தாக்கல் செய்த காசோலைகளின் விபரங்களை சுப்புராஜ் அவரது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் கூறியுள்ளாரா என்றால் தெரியாது. எதிரியின் மீது நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் மீது சுப்புராஜ் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளாரா என்றால் தெரியாது. சமரசம் பேசுவது சம்பந்தமாக ஏதேனும் ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் இல்லை. நாங்கள் பேசியதற்கு ஏதேனும் ஆடியோ, வீடியோ உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து எப்போது எனது தரப்பில் காசோலைகளை தாக்கல் செய்தேன் என்றால் தெரியாது.

4) புகார்தாரர் எத்தனை வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினாரா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் சமரசம் பேசசொல்லி கூறவில்லை என்றும், எதிரி என்னிடம் காசோலைகள் கொடுக்கவில்லை என்றும், ஒரு வருடமாக காசோலைகளை நான் வைத்திருந்தது குற்றம் என்றால் சரியல்ல. அதனால் எதிரியின் என் மீது வழக்கு தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி என்னிடம் சமரசம் செய்ய சொல்லி கூறியிருந்தால் அதற்கான எழுத்துபூர்வமான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன், அவ்வாறு தாக்கல் செய்யாத பட்சத்தில் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.23 15:28:45 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam